
பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை 10.07.2022 கதிர் 137

## இன்று ஹஜ் பெருநாள்



இஸ்லாம் மக்களின் புனித பண்டிகையான ஹஜ் பெருநாள் இன்று கொண்டாடப்படுகின்றது.

இடைவெளிமற்றும் வேறுபாடுகளை நீக்கி சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்குவதே 2

# பிரதமரின் இல்லம் தீ வைப்பு: பலரும் கண்டனம்; மூவர் கைது



கொழும்பு, கொள்ளுப்பிடியிலுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் நேற்று மாலை தீவைக்கப்பட்டமைக்குப் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அனைத்து வகையான வன்முறைகளையும் மன்னிக்கக் கூடாது என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட 2

# அமைதியை நிலைநாட்ட மக்கள் ஆதரவு அவசியம்

## பாதுகாப்புப் படைகளின் பிரதானி கோரிக்கை



இலங்கையில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது எனவும், அதற்காக அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா 2

# அதிரடியாகப் பதவி விலகினார்கள் தம்மிக்க உள்ளிட்ட 5 அமைச்சர்கள்

## சர்வகட்சி அரசு அமைக்க வழிவிட்டு



**கோட்டாபய அரசுக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் நேற்று உக்கிரமடைந்து ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றைப் போராட்டக்காரர்கள் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள நிலையில், மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து தெற்கு அரசியலில் அதிரடி மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.**

**இந்நிலையில், இதுவரை 5 அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.**

**தம்மிக்க பெரேரா, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, மஹிந்த அமரவீர மற்றும் பந்துல குணவர்தன ஆகியோரே தமது அமைச்சுப் பதவிகளை இவ்வாறு இராஜினாமா செய்துள்ளனர்.** 2

## நாடாளுமன்றம் வருகிறார் கரு?



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை மீண்டும் நாடாளுமன்றம் வரவைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று அறியமுடிகின்றது.

இதற்காகத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைத் துறப்பதற்கு மயந்த திஸாநாயக்க தயாராகவே 2



## ஜனாதிபதி மாளிகைக்கு மக்கள் படையெடுப்பு

ஜனாதிபதி மாளிகையையும், ஜனாதிபதி செயலகத்தையும் போராட்டக்காரர்கள் நேற்று சுற்றிவளைத்துக் கைப்பற்றினர். தொடர்ந்தும் அங்கேயே தங்கிவருகின்றனர்.

இந்நிலையில், ஆடம்பர வசதிகளைக் கொண்ட ஜனாதிபதி மாளிகையைப் பார்வையிடுவதற்குப் பெருமளவான மக்கள் அங்கு செல்கின்றனர்.

## போராட்டத்தில் 103 பேர் காயம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட மாபெரும் மக்கள் தன்னெழுச்சிப் 2

## அடுத்த கட்டம் தொடர்பில் இன்று முக்கிய கூட்டங்கள்



நாட்டின் தற்போதைய நிலைமையில் அடுத்த கட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளின் முக்கிய கூட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

அதற்கமைய சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியின் கட்சித் தலைவர்கள் 2

## கோட்டா மாளிகையிலிருந்து பெருந்தொகைப் பணம் மீட்பு




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தங்கியிருந்த ஜனாதிபதி மாளிகையை, போராட்டக்காரர்கள் நேற்றுக் கைப்பற்றிய பின்னர், இரகசிய அறையொன்றில் இருந்து பெருந்தொகை பணம் மீட்கப்பட்டுள்ளது.

ஐந்தாயிரம் ரூபா நோட்டுகள் அடங்கிய பணத்தைப் போராட்டக்காரர்கள் கணக்கிட்டு, அதனைப் பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளித்துள்ளனர்.

பணத்தின் சரியான பெறுமதி இன்னும் தெரியவரவில்லை. அது தொடர்பான விசாரணைகள் இடம்பெறும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யானை தாக்கி விவசாயி சாவு



மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ்பிரிவிலுள்ள கண்டியனாறு கிராமத்தில் காட்டுயானை தாக்கியதில் வயல் காவலில் இருந்த விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார் 2

## அதிரடியாகப் பதவி விலகினார்கள் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வகட்சி இடைக்கால அரசு அமைய வழிவிட்டே அவர்கள் பதவி துறந்துள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

ஹரின், மனுஷ ஆகியோர் ஐக்கிய மக் கள் சக்தியில் இருந்து விலகி, அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தம்மிக்க பெரேரா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் கடந்த மாதம் ஜூன் 24 ஆம் திகதியே தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ஷ விலகிய பின்னர், அவரின் வெற்றிடத்துக்குத் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டிருந்தார்.

## நாடாளுமன்றம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றார் என்று தெரியவருகின்றது.

நவீன் திஸாநாயக்க, கரு ஜயசூரியவின் மருமகன். அவரின் தம்பியே மயந்த திஸாநாயக்க. இவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி. என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறந்தவுடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இடைக்கால ஜனாதிபதியாக வேண்டும், 30 நாட்களுக்கு முன்பாகவே நாடாளுமன்றம் பதில் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்று நேற்று மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தின்போது ஏற்பட்ட அமைதியின்மை சம்பவங்களால் 103 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 11 ஊடகவியலாளர்களும், 5 பாதுகாப்புத் தரப்பினரும் அடங்குகின்றனர்.

காயமடைந்த 103 பேரில் 55 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையோர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

## அடுத்த கட்டம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் இன்று இடம்பெறுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக மக் க ள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

சர்வகட்சிஅரசுசம்பந்தமாகஇதன்போது விரிவாக அலசி ஆராயப்படவுள்ளது.

அதேவேளை, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார உட்பட 9 சுயாதீனக் கட்சிகளின் கூட்டமும் இன்று நடைபெறுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மலையகக் கட்சிகள் சர்வகட்சி அரசுக்கு முழு ஆதரவை வெளியிட்டுள்ளன.

## யானை தாக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருநூறுவில் - உன்னிச்சை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 57 வயதுடைய கருணாகரன் என்பவரே இதன்போது பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று குறித்த நபர் தனது வீட்டிலிருந்து கண்டியனாறு பிரதேசத்தில் உள்ள தனது வயலைப் பராமரித்து காவலில் இருந்தபோது திடீரென வயலினுள் காட்டுயானை குறித்த நபரினை தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் அயலில் உள்ள வயல் காவலில் இருந்த விவசாயிகளால் மீட்டெடுத்து தாண்டியடி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வவுணதீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(மற்றுமொரு யானை தாக்கிய சம்பவத்தில் ஒருவர் பலியான விடயம் 06 ஆம் பக்கத்தில் பிரசுரமாகின்றது.)

## பிரதமரின் இல்லம் தீ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் ஆகியோர் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது ஒரு பெரிய கும்பல் பொலிஸ் மற்றும் படையினருடன் மோதிய சம்பவமும் பதிவாகியிருந்தது.

அதேநேரத்தில் பொலிஸார் போராட்டக்காரர்களைக் கலைக்க கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

இதையடுத்து, வீட்டின் சுவர்களைத் தாண்டியும் தடுப்புகளை உடைத்தும் உள்ளே சென்ற ஒரு சிலர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்குத் தீ வைத்தனர்.

இதேவேளை, தீ வைப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

## அமைதியை நிலைநாட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடியை அமைதியான முறையிலும், அரசமைப்பு முறையிலும் தீர்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தத் தருணத்தில் நாட்டின் அமைதியைப் பாதுகாக்கப் படையினருக்கும் பொலிஸாருக்கும் தேவையான ஆதரவை வழங்குமாறு அவர் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் கைப்பற்றப்பட்ட நிலையில், சில வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

இந்தநிலையிலேயே பாதுகாப்புப் படைகளின் பிரதானியின் கோரிக்கை வெளியாகியுள்ளது.

முப்படைத்தளபதிகளுடன் இணைந்து அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

## இன்று ஹஜ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹஜ் பண்டிகையின் முக்கிய நோக்கமாகும்.

இது உலகளவில் இஸ்லாம் மக்களால் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகையாகும்.

தொலைபேசி இலக்கம்- 076 443 8622




| மணமகன் விபரம் | மணமகன் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி : 10.06.1987<br>ஜாதி: V ஆண்<br>மதம் : இந்து<br>கல்வி தகைமை : Msc Engineer<br>எதிர்பார்ப்பு : கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகள் | பிறந்த திகதி : 27.12. 1989<br>மதம் : இந்து<br>ஜாதி : V பெண் செவ்வாய் குற்றமுடையவர்<br>கல்வி தகைமை : MBA<br>தொழில்: கனடா பிரஜை<br>எதிர்பார்ப்பு : கனடா மணமகன் |
| பிறந்த திகதி : 26.09.1990<br>ஜாதி: N ஆண்<br>மதம் :இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 2 ல் செவ்வாய்<br>கல்வி தகைமை : Bsc தொழில் : அரச உத்தியோகத்தா<br>எதிர்பார்ப்பு : அழகான மணமகள் | பிறந்த திகதி : 3.11.1995<br>மதம் : இந்து<br>ஜாதி : V பெண்<br>கல்வி தகைமை: University<br>எதிர்பார்ப்பு : வெளிநாட்டு மணமகன் |
| பிறந்த திகதி: 11.08.1994<br>ஜாதி: P செவ்வாய் குற்றமுடையவர்<br>எதிர்பார்ப்பு : ஒரே குலத்தை சோந்த அழகிய மணமகள் | பிறந்த திகதி : 01.01.1992<br>மதம் : இந்து .<br>ஜாதி : Pபெண்<br>கல்வி தகைமை: NCAT.<br>எதிர்பார்ப்பு : உள்ளூர் அரச சேவை மணமகன் |
| பிறந்த திகதி: 1981.04.25<br>ஜாதி: V ஆண்<br>மதம் : இந்து<br>கல்வி தகைமை : A/L<br>தொழில்: சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு : ஐரோப்பிய நாட்டு இலங்கை தமிழ் பெண் | பிறந்த திகதி : 17.05.1998<br>மதம் : இந்து .<br>ஜாதி ::P பெண் செவ்வாய் குற்றமுடையவர்<br>கல்வி தகைமை: AL<br>எதிர்பார்ப்பு :உள்நாடு - வெளிநாட்டு மணமகன் |



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றமும் ஜீஜுப்பிதான்!

கோலாகலமாக அதிகாரத்துக்கு – பதவிக்கு – வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கோபாவேஷத்தோடு மக்களால் அடித்து விரட்டப்படும் அனர்த்தம் நடந்தேறி வருகிறது.

சட்ட ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, சட்ட முறையற்ற நடவடிக்கைகள் மூலம் பதவியை விட்டுத் துரத்தப்படும் அழுத்தத்துக்கு அடிபணியும் நிலைக்கு வந்திருக்கிறார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறி, நாட்டைக் குட்டிச்சுவராக்கிய ஜனாதிபதி ஒருவரை, சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு, சட்டத்தில் போதிய ஏற்பாடுகள் ஒழுங்குகள் செய்யப்படாமையால் ஏற்பட்ட விபரீத நிலைமையின் விளைவு இது.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் 69 லட்சம் வாக்குகள் என்ற அபரிமித வெற்றியை ஈட்டிய ஜனாதிபதியான கோட்டாபஜ ராஜபக்ஷ குறுகிய காலத்தில் நாட்டின் மிக மிக மோசமான ஜனாதிபதி என்ற பெயர் எடுத்து மக்களால் துரத்தப்படும் நிலைக்கு வந்தபோது, இரண்டரை வருடங்களுக்கு முன்னர் அவருக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை இழக்கப்பட்டு விட்டது என்று அனைத்துத் தரப்பினராலும் சுட்டிக் காட்டப்பட்டது. அதனை – மக்களின் முடிவை – இடையில் அளவீடு செய்வதற்கு சட்ட ஒழுங்கு இல்லாதயைச் சாதகமாகப் பயன்படுத்தி, அந்த யதார்த்தத்தை ஏற்க மறுத்தார் கோட்டாபய.

அதனால் அவரை வீட்டுக்கு அனுப்ப மக்கள் எழுச்சி இந்த மட்டம் வரை சட்டத்தை மீறிச் செயல்படும் கட்டாயம் வரை மக்களைத் தள்ளியது.

இந்த நிலைமை இப்போதைய நாடாளுமன்றத்துக்கும் உள்ளது என்பதை நாடாளுமன்றின் 225 எம்.பிக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களால்துரத்தப்படுகின்றஜனாதிபதிகோட்டாபயவுக்கு ஆதரவாக, அவர் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் ஆடிய நாடாளுமன்றம்தான் இது என்பதும், இந்த நாடாளுமன்றத்தின் முதல் இரண்டு ஆண்டு காலப் பதவிக்காலம் முடிவடையும் முன்னரே அதுவும் கூட மக்கள் ஆணையை – செல்வாக்கை – இழந்துவிட்டது என்பதும் கண்கூடு.

'கோட்டா கோ ஹோம்' எனும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தை வெற்றிகரமான திசையில் முன்நகர்த்தும் தரப்புக்கள், இந்த நாடாளுமன்றமும் மக்களின் கருத்தியலைப் பிரதிபலிக்கவில்லை, கோட்டா இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் ஆடுகின்றது என்று வலியுறுத்தி வந்தமையையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது. இந்தச் சமயத்திலாவது தன்னலம் துறந்து, அரசியல் சின்னத்தனங்களைக் கைவிட்டு, நாட்டுக்காக செயற்படப் பொறுப்புடன் பணியாற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வர வேண்டும்.

முப்படைகள் மற்றும் பொலிஸையும், நாடாளுமன்றத்தையும் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இந்தக் கதிக்குள்ளாக்கிய மக்களுக்கு – ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் போன்றவற்றை அதிரடியாக புகுந்து கைப்பற்றிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த மக்கள் எழுச்சிக்கு – நாடாளுமன்றுக்குள் புகுவது ஜீஜுப்பி வேலை. அதைப் புரிந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும்.

பிரதமர், ஜனாதிபதி பதவி விலகினால் அமைச்சரவையும் முழுமையாக கலைந்து விடும். அப்படி இருக்கும் போது, கோட்டா பதவியில் உறுதியாக இருக்கும் வரை அவருக்கு முதுகு கொடுத்து – முண்டு கொடுத்து – பதவியாசையில் குத்துக் காரணங்கள் அடித்து, அட்டகாசம் பண்ணிய அமைச்சர்கள், இப்போது ராஜினாமா என்ற நாடகமாடி அலப்பறை பண்ணுகிறார்கள். அதை விடுத்து இன்றைய அரசியல் நெருக்கடிக்குக் காத்திரமான தீர்வு காண, சுயநலம் துறந்து செயல்படுவதுதான் எம்.பிக்களுக்கு அழகு. பாதுகாப்பு. அவர்களின் அரசியல் எதிர்காலத்துக்கும் சிறப்பு.

## ஜனாதிபதி கோட்டாபயவின் மாளிகையில் பதுங்கு குழிக்குள் உள்ள இரகசிய அறை!



கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை முற்றிலுமாக போராட்டகாரர்களில் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், சனிக்கிழமை இரவு பதுங்கு குழி ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்நிலையில், அந்த பதுங்கு குழிக்குள் இரகசிய அறை ஒன்று இருப்பதும் தற்போது தெரியவந்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்தது.

கடந்த மூன்று மாத காலத்திற்கு மேலாக போராட்டங்கள் இடம்பெற்று வந்த நிலையில் மே மாதம் 9 ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகினார்.

இந்நிலையில், ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் உடன் பதவி விலக வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில், சனிக்கிழமை அரசாங்கத்துக்கு எதிராக பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ மாளிகை முற்றிலும் போராட்டகாரர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, ஜனாதிபதி மாளிகையில் பதுங்கு குழி ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி மாளிகையில் பிரத்தியேகக் கட்டடம் ஒன்றில் இந்த பதுங்கு குழி இருக்கின்றது. இந்த பதுங்கு குழிக்குள் வெவ்வேறு அலுமாரி கதவுகள் ஊடாகவே உட்பிரவேசிக்க முடிகின்றது.

அத்துடன், இந்த பதுங்கு குழிக்குள் பிரமாண்டலிவ்ற் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த பதுங்கு குழியில் அடிப்பகுதியில் மிகவும் இரகசிய அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் வலுவான இரும்பு கதவுகளால் திறக்க முடியாத அளவிற்கு இந்த இரகசிய அறை அமைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அந்த அறையின் கதவு இதுவரையில் திறக்க முடியவில்லை. ஏதேனும் முக்கிய அம்சங்கள் அல்லது விடயங்கள் அதில் இருக்கலாம் என மக்கள் மத்தியில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், அந்த இரகசிய அறை மிகவும் குளிரூட்டப்பட்ட அறையாக அமைக்கப்பட்டுள்ளது. அறையின் இரும்பு கதவின் அடிப் பகுதியில் இருக்கும் சிறிய இடைவெளி ஊடாக வரும் குளிர் காற்றின் ஊடாக அதனை உணர முடிவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின் மாளிகை முற்றுகையானதும் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்த முல்லை மக்கள்

ஜனாதிபதி மாளிகைக்கு திரண்ட மக்களின் போராட்ட வெற்றிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முல்லைத்தீவு மக்கள் பட்டாசு கொளுத்தி கொண்டாடியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் மக்கள் பட்டாசு கொளுத்தி கொண்டாடியுள்ளனர்.

இதன்போது சமூக செயற்பாட்டாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் –

இலங்கை நாட்டில் அதிகப்படியான 69 லட்சம் மக்களின் வாக்குகளை பெற்ற ஜனாதிபதி அதே மக்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளார். இன்று பேசுபொருளாக அனைத்து மக்களிடமும் இந்தப் போராட்டம் காணப்படுகின்றது.

இலங்கை நாட்டில் மக்கள் இறுக்கமான பொருளாதார நெருக்கடியிலும் மக்கள் வீறுகொண்டு எழுந்து ஜனாதிபதியையும், பிரதமரையும் பதவி விலகுமாறு கோரியுள்ளனர். மக்களின் எழுச்சியின் வடிவம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து உறவுகளுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்கள் ஆதரவைக் கொடுத்துள்ளதுடன், வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



## கண்டியிலிருந்து ஆர்ப்பாட்டத்து சென்றவர்களுக்கு முழு ரயில் கட்டணத்தையும் செலுத்திய ஒரு நபர்!



நேற்று (சனிக்கிழமை) கொழும்பில் பாரிய அரச எதிர்ப்பு மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற நிலையில், மக்கள் காலிமுகத்திடல் பேராட்டக்களத்தை நோக்கி படையெடுத்தனர்.

இந்நிலையில், கண்டி மற்றும் காலியில் இருந்து கொழும்பு நோக்கி இரு ரயில்கள் புறப்பட்டன.

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயிலுக்குரிய முழுக்கட்டணத்தையும் ஒரு வியாபாரி தனியாக செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# படுகொலை செய்யப்பட்ட ஜப்பான் முன்னாள் பிரதமர் அபேவுக்கு மக்கள் அஞ்சலி; 12ஆம் திகதி இறுதிச்சடங்கு



ஜப்பானில் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் உடல், பொதுமக்கள் அஞ்சலிக்காக டோக்கியோவில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டது. ஜப்பானின் முன்னாள் பிரதமரான ஷின்சோ அபே, கடந்த 2020ம் ஆண்டு உடல் நலக்குறைவு காரணமாக பதவி விலகினார். அவர், நேற்று முன்தினம் நாடாளுமன்ற மேலவைத் தேர்தலுக்காக நாரா நகரில் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். அப்போது, 41 வயது நபர் ஒருவர் அபேயின் பின்னால் இருந்து, நாட்டு துப்பாக்கியால் சுட்டதில் பலியானார். இந்நிலையில், அபேயின் உடல் நேற்று நாரா மருத்துவமனையில் இருந்து அமரர் ஊர்தி வாகனம் மூலமாக, தலைநகர் டோக்கியோவில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அபேயின் மனைவி அகி அபே கண்ணீர் மல்க, காரில் அமர்ந்தபடியே உடலை எடுத்து வந்தார். வீட்டின் முன் குவிந்திருந்த மக்கள், அபேவுக்கு அஞ்சலி செலுத்தினர். ஜப்பான் பிரதமர் கிஷிடோ, அபேயின் வீட்டிற்கு வந்து அஞ்சலி செலுத்தினர்.


### குவாட் நாடுகள் அஞ்சலி

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் அமைந்துள்ள குவாட் அமைப்பு, மறைந்த ஷின்சோ அபேக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, பிரதமர் மோடி, அதிபர் பைடன், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானிஸ் ஆகியோர் நேற்று விடுத்த கூட்டறிக்கையில், 'நமது ஒவ்வொரு நாட்டுடனும், ஜப்பான் உடனான உறவில் மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தியவர் அபே. குவாட் அமைப்பு நிறுவுவதிலும் அவர் முக்கிய பங்காற்றி உள்ளார். அமைதியான, வளமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை நோக்கிய எங்கள் பணியை இரட்டிப்பாக அதிகரிப்பதன் மூலம் அபேயின் நினைவை போற்றுவோம்,' என கூறப்பட்டுள்ளது. மேலும், அபேயின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், இந்தியாவிலும், அமெரிக்காவிலும் அரசு கட்டடங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் நேற்று பறக்கவிடப்பட்டது.

### மத குருவுக்கு வைச்ச குறி

அபேயை சுட்டுக் கொன்றார் என கைது செய்யப்பட்ட முன்னாள் ராணுவ வீரர் டெட்சுயா யமகாமியிடம் (41) பொலிஸார் தீவிரமாக விசாரிக்கின்றனர். அவன் விசாரணையில், அபேயின் செயல்கள் பிடிக்காதமையால் கொன்றேன் என கூறி உள்ளார். மேலும், அபே தொடர்புடைய ஒரு மத அமைப்பைச் சேர்ந்த மத குருவை கொல்லத்தான் டெட்சுயா முதலில் திட்டமிட்டுள்ளார். அவர் பிரசாரத்திற்கு வராதமையால் அபேயை கொன்றார் என மீடியா தகவல்கள் கூறுகின்றன.

## 28 முறை கைது செய்யப்பட்ட கொலிவுட் நடிகர் மரணம்



பிரபல கொலிவுட் வில்லன் நடிகர் டோனி சிரிகோ (79), திரைக்கு வந்த 'குட்பெல்லாஸ்', 'மோப் குயின்', 'லவ் அன்ட் மணி', 'பிங்கர்ஸ்', 'த ஒன் மேன் ஜுரி' உள்பட பல படங்களில் நடித்துள்ளார். கடந்த 1974ல் 'கிரேசி ஜோ' என்ற படத்தில் அறிமுகமான அவர், கடைசியாக 2017ல் வெளியான 'வொண்டர்புல் வீல்' என்ற படத்தில் நடித்திருந்தார். பெரும்பாலும் வில்லன் மற்றும் கேங்ஸ்டராகவே நடித்துள்ளார்.

'த சோப்ரானோஸ்' என்ற வெப்தொடரில் பாலி வால்னெட் என்ற கொடூரமான கேங்ஸ்டராக நடித்து இருந்தார். டோனி சிரிகா நடிக்க வருவதற்கு முன்பு நிஜத்தில் வில்லனாகவும் இருந்தார். மிரட்டி பணம் பறித்தல், கொடூரமான ஆயுதங்களை வைத்திருத்தல் போன்ற குற்றங்களுக்காக 28 முறை கைது செய்யப்பட்டு, 20 மாதங்கள் வரை சிறையில் இருந்துள்ளார். நியூயோர்க்கில் தனது மகன்கள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் வசித்து வந்த டோனி சிரிகோ, உடல்நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

## உக்ரைன் மீதான முழு இராணுவ நடவடிக்கை இன்னும் தொடங்கவில்லை என்கிறார் புடின்



உக்ரைன் மீதான முழு இராணுவ நடவடிக்கை இன்னும் தொடங்கவில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்,

'தங்களதுநிபந்தனைகளை உக்ரைன் உடனடியாக ஏற்காவிட்டால் மிக மோசமான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

உக்ரைனில் விவகாரத்தைப் பொறுத்தவரை மேற்கத்திய நாடுகள் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் செயலில் ஈடுபடுகின்றன. உக்ரைன் அரசாங்கதைத் தூண்டிவிட்டு, கடைசி உக்ரைனியர் சாகும்வரை அந்த நாடு போரிட வேண்டும் என்று மேற்கத்திய நாடுகள் விரும்புகின்றன.

இதில் மிகப் பெரிய சோகம் என்னவென்றால், மேற்கத்திய நாடுகளின் பேச்சைக்கேட்டுஉக்ரைனும் அந்த திசையை நோக்கித் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையில், உக்ரைன் மீதான முழுமையான நடவடிக்கைகளை ரஷ்யா இன்னும் தொடங்கவே இல்லை. தற்போது நடைபெறும் தாக்குதல்கள் எல்லாம் மிகவும் மிதமானவை.

எனவே, ரஷ்யாவின் நிபந்தனைகளை உக்ரைன் விரைவில் ஏற்பதுதான் அந்த நாட்டுக்கு நல்லது. இல்லையென்றால், மிக மோசமான விளைவுகளுக்காக உக்ரைன் தன்னை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

உக்ரைனுடன்பேச்சுநடத்தி, ராஜீய ரீதியில் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால், உக்ரைனோ, போர்க்களத்தில் ரஷ்யாவை வீழ்த்திவிடப்போவதாக கூறி வருகிறது. அதனை அவர்கள் முயற்சித்துப் பார்க்கட்டும்' என கூறினார்.

## அடுத்த பிரித்தானிய பிரதமர் யார்? களத்தில் பல முக்கிய தலைகள்



பொரிஸ் ஜோன்ஸன் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தமையையடுத்து, நாட்டின் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியில் பங்கேற்க இருக்கிறேன் என அதிகாரப்பூர்வமாக அறிவிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

முதலாவதாக, அந்தப் போட்டியில் பங்கேற்கவிருப்பதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர். சூயலா பிரேவ்மேன் வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

அவருக்கு அடுத்தபடியாக, கொரோனா தடுப்புக் குழு துணைத் தலைவர் ஸ்டீவ் பேக்கரும் அதனைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறை அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடப் போகிறேன் என அறிவித்தனர்.

இந்த நிலையில், வெளிவிவகாரங்களுக்கான சிறப்புக் குழு தலைவராக பொறுப்பு வகித்து வரும் டாம் டுகென்தாட்டும் பிரதமர். பதவிக்கான போட்டியில் பங்கேற்கப்போகிறேக் என வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

இது தவிர, நிதியமைச்சர் பதவியிலிருந்து அண்மையில் விலகிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கும் இந்தப் போட்டியில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதவிர, சஜித் ஜாவித் மற்றும் ஜெர்மி ஹண்ட் ஆகியோர் ஏற்கனவே நடைபெற்ற தலைவர் தேர்தலில் போட்டியிட்டவர்கள். அவர்கள் இந்த முறையும் போட்டியிட வாய்ப்புண்டு.

அதேபோல, வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டண்ட், வெளியுறவு செயலர் லிஸ் ட்ரஸ், வெளியுறவு விவரங்கள் குழு தலைவர் டாம் டுகெந்தாட், பாதுகாப்பு செயலர் பென் வாலேஸ், கருவூலர் நாதிம் ஸகாவி', அட்டர்னி ஜெனரல் ஸ்வெல்லா ப்ரேவர்மேன் ஆகியோரும் இந்த பட்டியலில் உள்ளனர்.

அவரைத் தவிர, மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியில் பங்கேற்க முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான வாக்கெடுப்பு திகதிகளை கன்சர்வேட்டிவ் கட்சியின் சக்திவாய்ந்த '1922 குழு' அடுத்த வாரம் அறிவிக்கும். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் ரகசிய வாக்கெடுப்புகளில், கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்கெடுப்பு நடைபெறும், அதில் இறுதியாக வெற்றி பெறுபவர், பிரித்தானியாவின் அடுத்த பிரதமராகப் பொறுப்பேற்பார்.

# அசாமில் பரவும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஒன்பது நாள்களில் எட்டுப் பேர் உயிரிழப்பு



அசாம் மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் மற்றும் மலேரியா பரவி பலரது உயிரை எடுக்கிறது. குறிப்பாக, மழைக்கால வெள்ளப் பருவத்தில் வேகமாக பரவும் இந்த காய்ச்சல் மே மாதத்தில் தொடங்கி ஒக்ரோபர் மாதம் வரையில் நீடிக்கிறது.

ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அசாமில் கடந்த 9 நாள்களில் மட்டும் ஜப்பானிய மூளைக்காய்ச்சலால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 82 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய சுகாதார மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மாவட்ட விரைவுப் பதில் குழுக்களை அமைக்கவும், நிலைமையை உன்னிப்பாகக் கண்காணிக்கவும் மாவட்ட அதிகாரிகளை சுகாதாரத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து அசாம் மாநில சுகாதாரத் துறையின் முதன்மைச் செயலர் அவினாஷ் ஜோஷி தேசிய சுகாதார இயக்கத்தின் இயக்குநர் டாக்டர் எம்.எஸ்.லட்சுமி பிரியா ஆகியோர் நேற்று மாவட்ட அதிகாரிகளுடன் காணொலி மூலம் ஆலோசனைக் கூட்டமொன் றை நடத்தியிருந்தனர். அதில், நிலைமையை சமாளிப்பதற்காக, வரும் 16 ஆம் திகதிக்குள் மாவட்ட விரைவுப் பதில் குழுவை அமைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

## அதிகாரத்திற்காக பயங்கரவாதிகளுடன்கூட காங்கிரஸ் கூட்டணி அமைக்குமாம்!

### பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் குற்றச்சாட்டு



22 இடங்களில் பயங்கரவாதம் பற்றி காங்கிரஸ் கட்சி பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடத்த உள்ளது என்பது ஆச்சரியமளிக்கும் ஒரு விடயம் என்று, பா.ஜ.கவின் தேசிய செய்தி தொடர்பாளர் சம்பித் பத்ரா டெல்லியில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்

காங்கிரஸ் பயங்கரவாதத்துடன் துணை நின்றது என கூறினால் அது மிகையாகாது. இந்தியாவில் எங்கெல்லாம் பயங்கரவாத செயல்கள் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் தனது அரசியலால், காங்கிரஸானது பயங்கரவாதிகளையும் மற்றும் பயங்கரவாதத்தினையும் ஆதரித்தே வந்துள்ளது.

பட்லா ஹவுஸ் என்கவுண்டருக்கு பின்பு சோனியா காந்தியால் 3 நாள்களாக இரவில் தூங்க முடியவில்லை என்றும் தொடர்ந்து அழுது கொண்டே இருந்தார் எனவும் சல்மான் குர்ஷித்தே கூறினார். ஏன் சோனியா அழ வேண்டும்? பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதற்காகவா? என பத்ரா கேள்வி எழுப்பியுள்ளார்.

காங்கிரசுக்கும், ஜாகீர் நாயக்கிற்கும் உள்ள தொடர்பு அனைவருக்கும் நன்றாக தெரியும். சோனியா காந்தியே, ஜாகீருக்கு ஆதரவாக இருந்தவர். ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்காக ஜாகீரிடம் இருந்து காந்தி குடும்பம் ரூ.50 லட்சம் நன்கொடையாக பெற்றுள்ளது. ஜாகீரை காப்பாற்ற அனைத்து யுக்திகளையும் காங்கிரஸ் மேற்கொண்டது.

லஷ்கர்-இ-தொய்பாவின் சிலீப்பர் செல்லான இஷ்ரத் ஜகானை, ஒன்றுமறியாத அப்பாவி என சோனியாவுக்காக காங்கிரஸ் தொடர்ந்து கூறி வந்தது.

மும்பை குண்டுவெடிப்புக்கு பின்னர் காங்கிரஸ் எந்தவித ஸ்திர நடவடிக்கையும் எடுக்கவில்லை. உலகில், ஹபீஸ் சயீத் போன்ற எந்தவொரு பயங்கரவாதியும் ஏதேனும் ஒரு கட்சியை விரும்புகிறார் என்றால் அது காங்கிரஸ் கட்சியாக இருக்கும். யாகூப் மேமன் தூக்கிலிடப்படுவதற்கு எதிரான ஒரு சூழ்நிலையை காங்கிரஸ் கட்சி உருவாக்கியது.

ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டுமென்றால், பயங்கரவாதிகளிடம் கூட்டணி அமைக்க வேண்டும் என்றால் கூட காங்கிரஸ் கட்சி அதனைப் பற்றிக் கவலை கொள்ளாது, எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## மதத்தை வைத்து அரசியல் செய்பவர்கள் ஆன்மிக வியாதிகளென ஸ்டாலின் சாடல்



திருவண்ணாமலையில் நேற்றுக் காலை நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றினார்.

1963 ஆம் ஆண்டு நடந்த திருவண்ணாமலை இடைத்தேர்தல் தான் 1967 ஆட்சி மாற்றத்திற்கு அடித்தளமாக அமைந்தது. அதே போல கடந்த சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக நான், உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற பயணத்தை திருவண்ணாமலையில் தொடங்கினேன். அது வெற்றிப் பயணமாக தொடங்கி தற்போது ஆட்சிப் பயணமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சிக்கும் அடித்தளமாக அமைந்தது திருவண்ணாமலை தான்.

தி.மு.க. ஆட்சியில்தான் திருவண்ணாமலை கோவிலில் முழுமையாக திருப்பணிகள் செய்யப்பட்டன. 2004 ஆம் ஆண்டு திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலை தொல்பொருள் துறை எடுத்துக்கொள்ள முடிவு செய்தது. அப்போது தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த கலைஞர் கருணாநிதியிடம் பக்தர்கள் கோரிக்கை முன்வைத்தனர். தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கோவில் வந்தால் ஆன்மீகப் பணியில் தொய்வு ஏற்படும் என அவர்கள் தெரிவித்தனர். அதனை ஏற்று மத்தியில் காங்கிரஸ் ஆட்சி வந்ததும் அருணாசலேஸ்வரர் கோவிலை மீட்டுக் கொடுத்தோம். மதத்தின் பெயரால் அரசியல் கட்சி நடத்துபவர்களுக்கு இந்த வரலாறு தெரியாது.

திருவண்ணாமலையில் பௌர்ணமி நாள்கள், சித்ரா பௌர்ணமி மற்றும் கார்த்திகை தீபத்தின் போது தமிழகம் மட்டுமன்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வந்து பக்தர்கள் கிரிவலம் செல்கிறார்கள். 14 கிலோமீற்றர் கிரிவலப்பாதையில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். இதற்காக கலெக்டர் தலைமையில் குழு அமைத்து அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

மதத்தை வைத்து அரசியல் செய்பவர்கள் அரசியல்வாதிகள் அல்ல. அவர்கள் ஆன்மிக வியாதிகள். மனிதர்களை பிளவுபடுத்த ஆன்மீகத்தைப் பயன்படுத்தக்கூடாது. அறிவார்ந்தவர்கள் எங்களுக்கு ஆலோசனைகளைக் கூறலாம். அதனை நாங்கள் செயல்படுத்துவோம். எங்களுக்கு ஆக்கப்பூர்வமான பணிகள் காத்துக் கிடக்கின்றன. இது தேர்தல் காலம் அல்ல. மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய காலம். பொய், புரட்டுப் பேசி மலிவான விளம்பரம் தேடுபவர்கள் பேசுபவர்கள் பற்றி எனக்கு அக்கறையில்லை. அதே போல் நீங்களும் அவர்களை ஒதுக்கிவிட்டு மக்கள் பணிகளைச் செய்யுங்கள்.

பொய்களை அனாதைகளாக விட்டுவிட்டு உண்மை வெளிச்சத்தின் துணையுடன் சென்றால் முன்னேற்றம் அடையலாம் இலக்குகளை அடையலாம். காலம் தவறாமல் கடமையைச் செய்ய வேண்டும். கோப்புகள் நாடாவில் கட்டுக்குள் உறங்கிக் கிடக்கும்போது ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றப் புறப்பட்டுவிடுகிறது என்று கருணாநிதி கூறுவார். அரசு அலுவலகங்களில் எந்தவித கோப்புகளும் தேங்கி விடக்கூடாது என்ற எண்ணத்தில் பணியாற்ற வேண்டும். இதற்காகத்தான் நான் நேரம் கிடைக்கும் போதெல்லாம் நேரடியாக ஆய்வு செய்து வருகிறேன்.

மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் நாங்கள் மக்கள் பணியாற்றி வருகிறோம். என் மீது மக்கள் வைத்திருக்க கூடிய நம்பிக்கை நாள்தோறும் அதிகமாகிக்கொண்டே போகிறது. இந்த நம்பிக்கை என் மீது தனிப்பட்ட முறையில் வைத்த நம்பிக்கை அல்ல. தமிழினம் ஒளி பெற நடந்து கொண்டு இருக்கிற திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை. அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற உங்களில் ஒருவனாக உண்மையாக உழைப்பேன், என்று தனது உரையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளில் பெற்றோல் பயன்பாடு இல்லாமல் போய்விடுமென அமைச்சர் நிதின் கட்கரி தகவல்




மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் கிரிஷி என்ற வேளாண்மை பல்கலைக்கழகத்தினால் இந்திய மத்திய அமைச்சர் நிதின் கட்கரிக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டது. மாரட்டிய கவர்னர் பகத் சிங் கோஷ்யாரி, மத்திய அமைச்சருக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கினார்.

அந்த விழாவில் உரையாற்றிய நிதின் கட்கரி, இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளில் பெற்றோல் தீர்ந்து விடும். இதனால், நாட்டில் எரிபொருள்களுக்கு தடைவிதிக்கப்படும். மகாராஷ்டிரா மாநிலத்தில் விதர்பா மாவட்டத்தில் பயோ எத்தனோல் தயாரிக்கப்படுகிறது. இதனை வாகனங்களுக்கு பயன்படுத்தலாம். பச்சை ஹைட்ரஜனை ஆழ்துளைக் கிணற்றில் இருந்து தயாரிக்கலாம். இதனை ஒரு கிலோ 70 ரூபாவுக்கு விற்கலாம். விவசா-யிகள் உணவு வழங்குபவர்களாக மட்டுமில்லாமல் எரிசக்தி வழங்குபவர்களாகவும் மாற வேண்டும். விவசாயிகள் கோதுமை, நெல், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை மட்டும் பயிரிடுவதால் தனது எதிர்காலத்தை மாற்ற முடியாது, என்று தெரிவித்திருக்கிறார்.

## பக்ரீத் பண்டிகையொட்டி பிரதமர் மோடி வாழ்த்து

இஸ்லாமியர்களின் பெருநாளான பக்ரீத் பண்டிகை உலகம் முழுவதும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு இந்தியாவின் முக்கியத் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், பிரதமர் மோடி இஸ்லாமிய மக்களுக்கு பக்ரீத் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ஈத் முபாரக்! ஈத்-உல்-அதா நல்வாழ்த்துக்கள். மனித குலத்தின் நன்மைக்காக கூட்டு நல்வாழ்வு மற்றும் செழுமைக்கான உணர்வை மேலும் மேம்படுத்துவதற்கு இந்த பண்டிகை நம்மை ஊக்குவிக்கட்டும், என்று குறிப்பிட்டிருக்கிறார்.








# அம்பாறையில் நேற்று இரண்டு மக்கள் எழுச்சிப் போராட்டங்கள்

(பாறுக் ஷிஹான்)

'கோட்டா வீட்டுக்கு போ' எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டத்தில் இரு வேறு போராட்டங்கள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

மாளிகைக்காடு சந்தி பகுதியில் இருந்து கல்முனை நகர் வரை சைக்கிளில் பயணம் செய்து 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டமானது தேசிய மக்கள் சக்தியின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.ஆதம்பாவா தலைமையில் பொதுமக்கள் பலரும் ஒன்றிணைந்து முன்னெடுத்ததுடன் கல்முனை வரை போராட்டம் ஊர்வலமாக சைக்கிளில் சென்று முடிவடைந்தது.

இதன் போது சைக்கிளில் பயணம் செய்த போராட்டக்காரர்கள் எண்ணெய் இல்லை சமையலுக்கு கேஸ் இல்லை சமையலுக்கு, கோட்டா ரணில் – நல்ல துக்கம்; நல்ல துக்கம் – ரணில், கோட்டா, கோட்டா ரணில் வீட்டுக்குப் போ, கோட்டா ரணில் – சோடி வேண்டாம், மீனும் இல்லை, வலையும் இல்லை, டீசல் இல்லை –கல்வியும் இல்லை, பெற்றோல் இல்லை , வாழ்க்கை செலவு வான் அளவு; தொழில் இல்லை, கொள்ளையிட்ட டொலர் இல்லை – எனக் கோஷங்கள் எழுப்பினர்.

இதே வேளை மற்றுமொரு 'கோட்டா கோ ஹோம்' எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியினால் கல்முனைத் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் சட்டத்தரணி ஏ.எல்.எம்.றசாக் தலைமையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது நாட்டின் பெரிய தேசியக்கொடி ஒன்றினை ஏந்தி சென்ற போராட்டக்காரர்கள் சாய்ந்தமருது கல்முனை எல்லைப்பகுதியில் இருந்து ஆரம்பித்து சிறிது தூரம் ஊர்வலமாக சென்று போராட்டத்தை நிறைவு செய்தனர்.

இப்போராட்டத்திலும் ஜனாதிபதி கோட்டா மற்றும் பிரதமருக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பிய போராட்டக்காரர்கள் தற்போதைய அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தினர். இவ்விரு போராட்டங்களும் நேற்று கொழும்பில் இடம் பெறும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

## ஓட்டமாவடி – ஓட்டுவெளியில் யானை தாக்கி வயோதிபர் பலி

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – ஒட்டுவெளி எனும் வயல் பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் யானை தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வேளாண்மை அறுவடை நடைபெற்றுக் கொண்டிருந்த போது இவர் வயல் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளை அப்பகுதிக்கு வந்த நான்கு யானைகளை இந்நபர் விரட்டிய போது அதில் ஒரு யானை அவரைத் தாக்கியுள்ளது.

யானையின் தாக்குதலுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யானைத் தாக்குதலில் உயிரிழந்த நபர் ஓட்டமாவடி – 3 ஆம் வட்டாரம் பரிகாரியார் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 65 வயதுடைய முகம்மது முகைதீன் அகமது லெப்பை என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரின் ஜனாஸா வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளும் இத்தோடு நீங்குவதற்குப் பிரார்த்திப்போம்

### கல்முனை குத்பா பேருரையில் தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தியாகத்தை நினைவு கூரும் இத்தியாகப் பெருநாளில் இலங்கை திருநாடு எதிர் கொண்டுள்ள பிரச்சினைகள் நீங்கி, வறுமை ஒழிந்து ஒட்டுமொத்த பிரச்சினைகளும் நீங்க இறைவனிடம் பிரார்த்தியுங்கள் என்று மௌலவி சாபித் (ரயி ரியாதி) புனித ஹஜ்ஜுப் பெருநாள் நபிவழித் திடல் தொழுகையின் பின்னர் இடம்பெற்ற குத்பா பேருரையில் தெரிவித்தார்.

சர்வதேச பிறை அடிப்படையில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் நபிவழித் திடல் தொழுகை நேற்று கல்முனையில் நடைபெற்றது.

பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி சாபித் நிகழ்த்தினார்.

இங்கு கலந்து கொண்ட பிரதேசவாசிகள் முன்னிலையில் அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது–

இன்று எமது நாட்டினுடைய பொருளாதாரம் சரிந்திருக்கிற நிலையில் உண்பதற்கு வழியில்லாமல் எத்தனையோ ஏழைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு தனவந்தர்கள் அதிகம் அதிகம் உதவுங்கள். விசேடமாக உழ்ஹிய்யா என்கிற வணக்கத்தை நிறைவேற்றி அதனை ஏழை எளியவர்களுக்கு வழங்குங்கள். மிக நீண்ட நாள்களாக உண்ண உணவின்றி, ஒரு வேளை சாப்பாட்டையே சாப்பிட வழியின்றி வாடுகின்ற மக்களுக்கு எங்கள் உதவிகள் போய் சேரட்டும். குடும்பங்களோடு ஒற்றுமையாக இந்தப் பெருநாளைக் கொண்டாடுங்கள். எமது நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் பிரார்த்தியுங்கள்.

நேற்றைய தினம் ஹாஜிகள் அறபாவில் தரித்திருக்கும் தினத்தில் ஏனையவர்கள் நாம் அறபா நோன்பை நோற்றோம். 10 வது பிறையில் இன்று பெருநாள் கொண்டாடுகிறோம். இது நபிகள் நாயகம் காட்டித் தந்த சிறப்பான நபி வழியாகும். – என்றும் உரையாற்றினார்.

# சேருநுவரவிலும் ஆர்ப்பாட்டம்




ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில், திருகோணமலை – சேருநுவர பகுதியில், மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில், காத்தான்குடியில், நேற்று சனிக்கிழமை காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

# நாட்டுக்கு விரைவான தீர்வு அவசியம் என்கிறார் டக்ளஸ்!



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணப்படுவது அவசியமாகுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் களுக் கிடையில் சபாநாயகர் தலை மையில் நேற்று (சனிக் கிழமை) காணொலி மூலம் நடைபெற்ற விசேட கலந்துரை யாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரி வித்த அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா –

கட்சிகளின் தலைவர்கள் மற் றும் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களை விளங்கிக் கொண்டவனாக, நாட்டின் தற் போதைய பிரச்சினைகளுக்கு, எமது அரசியல் யாப்பிற்கு உட்பட்டு – நாட்டின் தற்போதைய நிலைமையையும் கருத்தில் கொண்டு, விரைவானதொரு தீர்வு எட்டப்பட வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.



# ஹரின் மற்றும் மனுஷவும் அமைச்சுப் பதவி துறப்பு!

மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகி யோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இருவரும் அறிக்கையொன்றை விடுத்து தமது இராஜிநாமாவை அறிவித்துள்ளனர்.

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை உருவாக்கி மக்களுக்கு விரைவான நிவாரணம் வழங்கும் நோக்கில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் பதவிகளில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்யவுள்ளனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொட்டகலை, தலவாக்கலையிலும் நேற்று போராட்டங்கள் நடந்தன!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி தலவாக்கலை மற்றும் கொட்டகலை நகரிலும் நேற்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மேற்படி நகரங்களில் கடைகள் மூடப்பட்டு, ம க்கள் போராட்டத்துக்கு வர்த்தகர்களும் தமது ஆதரவு வழங்கினர்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளை ஞர்கள், ஓட்டோ ஓட்டுநர்கள் என பல தரப்பினரும் போராட்டத்தில் குதித்தனர்.

அத்துடன், கோட்டா கோ கம கிளையொன்றும் தலவாக்கலை நகரில் உதயமானது. ஜனாதி பதியும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலகும்வரை போராட்டத்தை தொடரும் வகை யிலேயே கோட்டா கோ கம கிளை உருவாக் கப்பட்டுள்ளது.

தலவாக்கலையையும், அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழும் பலர் போராட்டத்தில் பங் கேற்று, கொழும்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கினர்.

இதேவேளை, கொட்டகலை நகரிலும், நகர வர்த்தகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்தோடு, கொட்டகலை கொமர்ல் பகுதி மக் களும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

# உலக சர்வாதிகாரிகளின் பட்டியலில் இடம்பிடித்தார் கோட்டாபய ராஜபக்ஷ!

## அநுரகுமார கூறுகிறார்



உலகின் ஏனைய சர்வாதிகாரி களின் தலைவிதியைப் போன்று நாட்டிலிருந்து தப்பிச்செல்ல வேண்டிய நிலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் ஏற் பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே இதனை தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

மக்களின் விருப்பத்துக்குப் பணிந்து, தலைமறைவாக இருந்து தனது அதிகாரத்தைப் பாதுகாக்க முயன்ற கோட்டாபய ராஜபக்ஷவிற்கு உலகின் ஏனைய சர்வாதிகாரிகளின் தலைவிதி யைப் போன்று தப்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவும், ரணில் விக்ரமசிங்கவும் அதிகா ரத்தை துறப்பதாக உத்தி யோக பூர்வ அறிவிப்பை வெளியிட் டதால், அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த ஜனநாயகப் பொதுப் போராட்டத்தின் உண்மையான சாராம்சத்தைப் புரிந்துகொண்டு, கொள்ளையடிக்கப்பட்ட செல் வத்தை நாட்டிலிருந்து மீட்டெ டுக்கவும், நியாயமான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனைவழங்கவும்வெற்றியை நோக்கி அதனை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியையும் மேற் கொண்டுள்ளேன். – என்றார்.







# மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்துகள் பாதிப்பு!

## நுவரெலியாவில் சம்பவம்

மத்திய மலைநாட்டில் தொடர்ந்து சீரற்ற காலைநிலை காரணமாக மழையுடனான கடுமையான கற்றும் வீசி வருகிறது. இதனால் நேற்று பிற்பகல் வீசிய காற்று காரணமாக நுவரெலியா – பதுளை வீதியில் உள்ள பாரிய மரம் முறிந்து விழுந்துள்ளது. இதனால் நுவரெலியா – பதுளை , நுவரெலியா – ஹற் றன் பகுதிகளுக்கு வாகனங்கள் செல்ல முடியா மல் போக்குவரத்து பாதிக்கப்பட் டுள்ளமையால் அப்பகுதி பொதுமக்கள் மரத்தை வெட்டி அகற்றி வருகின்றனர். தொடர் மழை காரண மாக சாலையோரங் களில் ஆங் காங்கே மண் சரிவு ஏற்பட்டு வருகிறது. பலத்த காற்றுடன் மழை பெய்து வருவதால் மரக்கி ளைகள் மின் கம்பிகள் மீது விழுந்து .அடிக்கடி மின் தடை ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் கோட்டாபயவின் மாளிகையில் பதுங்கு குழிகளை தேடிய போராட்டக்காரர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லம் மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன முற்றுமுழுதாக போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட் டுள்ளது. இந்நிலையில், போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையில் இரவு தங்கியுள்ள துடன், அங்கு ஜனாதிபதியால் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணம், பதுங்கு குழிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது ஜனாதிபதி மாளிகைக்குள் உள்ள இரகசிய பாதைகளை போராட் டக்காரர்கள் கண்டுபிடித்துள்ளதுடன், போர்க்காலத்தில் ஜனாதிபதி மாளிகையில் அவசரநிலைக்கு பயன்படுத்திய நிலத்தடி வீடொன்றும் கட்டப்பட்டுள்ளமையும் கண்டுபிடித்தனர். இது தொடர்பிலான காணொளிகள் தற்போது சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2022இல் வெளியிடப்பெற்றது.